# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1675 - 2010 ඔක්තෝබර් මස 08 වැනි සිකුරාදා - 2010.10.08

*1675 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | 1764 |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | - |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1764 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1766 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2010 இன் இல. 140*

*5/ஏஎவ்/747.*

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற இளைப்பாறுதல்*

*2010, திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய உத்தியோகத்தர் இலங்கை வான்படையிலிருந்து இளைப்பாறுதல் பெறுகிறார் :-*

விங் கொமாண்டர் ரொஷான் அருள்குமார் ஜேகொப் (01625) - நிர்வாகம்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
*2009, நவெம்பர் 27.*

*10-415*

*2010 இன் இல. 141*

*5/ஏஎவ்/751.*

**இலங்கை வான்படை**

*அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பெற்ற நிரந்தர வான் படைக்கு மாற்றம் செய்தல்*

*2009, ஒகத்து மாதம் 31 ஆந் திகதியிலிருந்து பின்வரும் பெயருடைய தொண்டர் உத்தியோகத்தர் தொண்டர் வான்படை சேவையிலிருந்து நிரந்தர வான்படைச் சேவைக்கு மாற்றம் செய்யப்பட்டார்:-*

விங் கொமாண்டர் கலிஷ்டஸ் ரோஹித்த டயஸ் குணவர்தன - (02792) - நிர்வாகம்/ரெஜிமேண்ட்

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சீ,
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
*2010, மே 10.*

*10-416*

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**பிறப்பு, இறப்பு பதிவுக் கட்டளைச் சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

*(110 ஆம் அதிகாரம்) பிறப்பு இறப்பு பதிவுக் கட்டளைச் சட்டத்தின் 05 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைவாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் டபிள்யு. டீ. ஜே. செனிவிரத்தன ஆகிய நான் 1935 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் 20 ஆந் திகதிய 8146 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் சப்ரகமுவ மாகாண, கேகாலை மாவட்ட தலைப்பின் கீழ் யட்டியாந்தோட்ட பிரதேச செயலர் பிரிவுக்குள் -*

*யட்டியாந்தோட்டை பிறப்பு இறப்பு பதிவு பிரிவுக்குரியதான 20 ஆம் இலக்க விடயத்துக்கு உடனடுத்ததாக இங்கு குறிப்பிடப்பட்ட "அ" அட்ட வணையில் காட்டப்படும் புதிய விடயங்களை உள்ளிடுவதன் மூலம்*

*அவ்வாறே கலிகமுவ பிரதேச செயலக பிரிவிற்குள் சதுபிடபத்துவ வடக்கு பிறப்பு இறப்பு பதிவு பிரிவுக்குரியதான 21 ஆம் இலக்க விடயத்துக்குப் பதிலாக இங்கு குறிப்பிடப்படும் "ஆ' அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை பதிலிடுவதனாலும்.*

*2010.08.27 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் இவ்வறிவித்தல் மூலம் திருத்தம் செய்கின்றேன்.*

டபிள்யு. டி. ஜே. செனிவிரத்தன,
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
*2010.08.27.*

**கேகாலை மாவட்டம்**

*பிரதேச செயலகப் பிரிவு - புலத்கொகுபிட்டி*

***அட்டவணை "அ"***

கந்துபிற்ற பத்துவ தெற்கு (கிழக்கு) பிறப்பு இறப்புப் பதிவு பிரிவில் பின்வரும் கிராமங்கள் உள்ளடங்கும்:-

(1) 17 ஏக்கர்/ஜனபதய கபகமுவ/லபுகெகுமுல்ல/யட்டிதரியவத்த பிரிவுகள்
(2) ஹிக்கொட/தும்முதுன
(3) ஏலகல்ல/குணுகலவத்த பிரிவு/கணங்கமுவ
(4) ஆக்கர 76 ஜனபதய/சந்திரகாபுர/புஸ்பனே/உடகொட/ஜனபதய விலும்பகேண/ யட்டிதரியவத்த பிரிவு
(5) கற்றியமுல்ல/ மனிமாறுவ/ பன்னல/ யட்டிதரியவத்த பிரிவு
(6) அலவதுர/ கணேகொட/ கந்தவத்த/ மாறன்வில வத்த பிரிவு/ மொரகலகந்த/ பிற்றகம
(7) அம்புவக்க/ அம்புவக்க கொலனி/ பம்பரகல/ கன்னங்கரபுரகம/ யட்டபாண
(8) பணாகொட/ தெல்குமுதுவெல/ தெல்கிற்றியாவ
(9) அம்பாகல/ தெகிகம்பல/ கிரிபோருவவத்த பிரிவு/ பாராவத்தை பிரிவு/ நாகொல்ல வத்தை/ பன்னல/ உள்வல
(10) கிரிபோருவ/ கிரிபோருவ வத்தை
(11) ஆட்றோஸ்வத்தை/ ஹப்புகம்மன/ களனி வத்தை பிரிவு/ பனாபிற்றி
(12) ஏறபுதவல/ ஹல்ஒலுவ/ குடுமீரிய குடியிருப்பு/ பாராவத்தை பிரிவு
(13) ஆந்துராபெலவத்தை பிரிவு/ புனஹல
(14) கந்தவ/ கந்தவவத்தை/ தும்பாகே/ தும்பாகே குடியிருப்பு
(15) கரதவத்தை/ லாவல குடியிருப்பு/ மாணங்கல வத்தை/ ஒருபத்த/ புனஹல பிரிவு/ புஸ்சகென குடியிருப்பு/ வாகொல்ல வத்தை
(16) வாகேல்ல/ வலிகந்த/ வலிதுடுவ
(17) அஜ்மீர்வத்தை/ கந்துசிறிகம/ நாரங்ல/ உடதுடுகல/ வராக்காஹேன
(18) அம்பமல்ல/ அதுராபொலவத்தை தெற்கு பிரிவு/ அம்பமல்ல வத்தை/ அதுராபெல
(19) கதைவல்ல/ களுபாகண வத்தை/ சிவகிரி வத்தை/ உடபொத்த
(20) மஹரங்கல்ல/ பீலவல/ யட்டிதரியவத்தை பிரிவு
(21) அதுராபெலவத்தை பிரிவு/ குடாதெனிய/ லாவல/ லாவல வத்தை/ யக்கெல்ல
(22) அட்டகுன்ன/ புலத்கொஹுபிட்டி/ நியுஸ்மியர பகல குடியேற்றம் / வியலிபிற்றிய
(23) ஊறுமீவல/ ஊறுமீவல குடியேற்றம் / ஊறுமீவல வத்தை
(24) துயகிற்றியாவல/ நியுஸ்மியர் இகல குடியேற்றம் / பனங்கம/ சேனபுர சூரிய மல்கம/ வாகரவத்த/ யட்டிபறிய/ யட்டிபறிய வத்தை
(25) இகல உடுவ/ கக்குலபாண/வாகறக்க வத்தை / உடுவ/ உனன்கந்த வத்த பிரிவு
(26) தேதுகல வத்த/ நாங்கல/ நெலுவக்கன/ நவுலன்வத்த/ நிர்மலாவத்தை
(27) கில்றோஸ்வத்த/ கந்தலஓய வத்தை/ பலன்பிற்றிய/ வின்சன் காட்டுத் தோட்டம்
(28) தேதுகல/ கங்கவரலியவத்தை பிரிவு/ கல்வின் குடியேற்றம்

**கேகாலை மாவட்டம்**

*பிரதேச செயலகப் பிரிவு - புலத்கெகுபிற்றிய*

***அட்டவணை "ஆ"***

கந்துபிற்ற பத்துவ தெற்கு பிறப்பு இறப்புப் பதிவு பிரிவில் பின்வரும் கிராமங்கள் உள்ளடங்கும்:-

(1) அருக்முல்ல/ ஹிக்கொடவத்த/ குணுகொடவத்த பிரிவு/ லாகுபனே தம்பிலிபிற்றிய
(2) மல்வான வடக்கு/ பின்தெனியவத்தை பிரிவு/ பொத்துக்கெலதெனிய
(3) ஹப்புதெனிய/ கீன்வல்ல/ மல்வான தெற்கு
(4) அருக்கம்மன இகலகம/ அருக்கம்மன பாகலகம
(5) அபேசிங்கந்த/ கொடகம்கஸ்பன்ன/ கந்நாப்றிய குடியேற்றம் / கரகல்ல பாராவத்தை பிரிவு
(6) அம்போ தெற்கு/ கத்னாபிற்றிய/ முஸ்லிம் கிராமம் / பராவத்தை பிரிவு/ பட்டியமுல்ல
(7) அம்பே முஸ்லிம் கிராமம் / அம்பே சிங்கள கிராமம் / அம்பேவத்த/ டிமெல்கெல்ல வத்த/ கொட்டியகும்புர குடியேற்றம்
(8) பேஅத்த/ தெமட்டகொல்ல/ கலவுடகேன குடியேற்றம் / கடுமகந்த/ ருக்காதன்ன
(9) குருநாகொட முஸ்லிம் கிராமம் / குருநாகொட சமனல கிராமம்
(10) ஆட்டால/ அட்டாலவத்தை பிரிவு/ பின்தெனிய வத்தை/ சல்கம வத்தை
(11) ஹரிகல/ இட்டமல்பான/ கினிகம
(12) ஆரந்தர/ கல்லவ குடியேற்றம் / மைலன்ட் வத்தை
(13) அப்பலகொட்டுவ/ கிரிதன
(14) பட்டுபிற்றிய/ பின்தெனிய
(15) போகாபிற்றிய/ மாபெடவத்த/ நாரன்வத்த
(16) போயகொட/ போயகொட வத்த/ திக்கேனவத்த
(17) ஆகல்கந்த/ கணட்டுவாவல/ மாபெட/ மாபெடவத்த பிரிவு

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 450613 –சுஜிவ புஸ்பா குமார சமரசிங்க
உதயகுமார சமரசிங்க

27.11.2009 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த/ காணியை ஈடுவைத்த சுஜிவ புஸ்ப குமார சமரசிங்க மற்றும் உதய குமார சமரசிங்க என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக திஸ்ஸமாராம பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. ஜி. ஆனந்தவின் 25.04.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1012 மற்றும் 17.09.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1128 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 14.09.2009 ஆந் திகதி வரை ரூபா 38,00,517.20 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறிகள் இலக்கங்கள் 1012 மற்றும் 1128 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 38,00,517.20 வுடன் 15.09.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 30,09,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

தென் மாகாணம், அம்பண்தொட்ட மாவட்டம், மாகம்பத்து திஸ்ஸமாராம பிரதேச செயலாளர் எல்லையில் ரணகெலிய வடக்கு (எப். வி. பி. 630) கிராமத்தில் அமைந் துள்ள நிலஅளவையாளர் எச். பி. பி. ஜயவர்தன 10.07.1982 ஆந் திகதிய வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 326 இல் காண்பிக்கப்பட்ட சந்தகிரி கொட காணியின் லொட் 4 எல்லைகள் – வடக்கு : லொட் 3 ; கிழக்கு : சந்தகிரிகொட காணியின் ஒரு பகுதி; தெற்கு : லெட் 5 ; மேற்கு: ரோட். இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 15பே.) மற்றும் இக் காணியில் அமைந்துள்ள கட்டிடம், மரங்கள், எல்லாம் சேர்த்து அம்பன் தொட்ட காணிப் பதிவகத்தில் C 21/107 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய காணி தற்சமயம் வரையப்பட்ட வரைபடம் மூலம் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

தென் மாகாணம், அம்பண்தொட்ட மாவட்டம், மாகம்பத்து திஸ்ஸமாராம பிரதேச செயலாளர் எல்லையில் ரணகெலிய வடக்கு (எப். வி. பி. 630) நிலஅளவையாளர் எச். பி. பி. ஜயவர்தனவின் 10.07.1982 ஆந் திகதிய வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 326 இல் காண்பிக்கப்பட்ட சந்தகிரி கொட காணியின் லொட் 4 க்கு நிலஅளவையாளர் டபிள்யூ. ஜி. டி. யு. கருணாரத்னவின் 17.03.2007 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 3824 இல் காண்பிக்கப்பட்ட லொட் A என்ற காணியின் எல்லைகள் – வடக்கு : எம். ஜி. சுமணலதாவின் இக்காணியின் லொட் 3 ; கிழக்கு : கே. கே. சாலிய உதயகுமார ; தெற்கு : கே. எல். திலக் இற்கு சொந்தமான இக்காணியின் லொட் 5 ; மேற்கு :ரோட் இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 15பே.) ஹெக்டயர் 0.0380 இக்காணியில் உள்ள எல்லாம் சேர்த்து.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10–369

---

## மக்கள் வங்கி – மித்தெனிய கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டப்படி 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2010.05.25 ஆந் திகதி பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"மக்கள் வங்கிப் பெயருக்கு தங்காலை பரசித்த நொ்தாரிசு பீ. எம். ட. குமுதுனி என்பவரால் அத்தாட்சிப்படுத்திய 2009.04.01 ஆந் திகதிய இலக்கம் 3518 என்ற ஈட்டு முறியின் பிரகாரம் வீரக்கொடி ஆரச்சிகே ஆரியசேன மற்றும் வீரக்கொடி ஆரச்சிகே ஹரிச்சந்திர புஷ்பகுமார என்பவர்கள் தவணை தவறியுள்ளார்கள். அதன் இலக்கம் 3518 என்ற மேற்படி முறியின் மீது ஆறு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 6,87,500.00) பணம் மக்கள் வங்கிக்கு வருமதியாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளபடியால், 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் ஆறு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 6,87,500.00) பணம் 2009.04.01 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்கு (26%) ப்படி ஆறு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து ஐநூறு ரூபா (ரூ. 6,87,500.00) பணம் மீது ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 எல் (29L) பிரிவின் கீழ் அறவிடப்பட வேண்டிய பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டு இருப்பின் அவற்றைக் கழித்து இலக்கம் 3518 என்ற ஈட்டு முறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மாத்தறை உத்தரவுபெற்ற ஏலதாரர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது."

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், வடக்கு கிருவாபத்துவே முரங்ககஸ்யாய கிராமத்தில் அமைந்துள்ள கெடகால

கஹ கொரடுவ என்ற ஹி.பி. 412987 இல் குறிப்பிடும் துண்டிலக்கம் 144 AX என்ற காணிக்காக அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் கே. டபிள்யூ. எஸ். கே. விக்னராஜா என்பவரால் 2008.03.03 ஆந் திகதி அளந்து தயாரித்த இலக்கம் 693 என்ற வரைபடத்தின் A எழுத்தையுடைய துண்டுக்காக - வடக்குக்கு : ஹி. பி. 399173 இல் குறிப்பிடும் காணி; கிழக்கிற்கு : அ. க. பி. 401 இன் துண்டு இலக்கம் 64 ; தெற்கிற்கு : இக்காணியின் மீதிப்பகுதி; மேற்கிற்கு : பிரதான வீதியில் இருந்து வீடு வரை செல்லும் வீதியும் இதன் எல்லைகளாகும். இந்த நான்கு எல்லைகளுக்குள்ளும் ஒரு ஏக்கர் ஒரு றூட் இரண்டு பேர்ச்சஸ்கள் (1ஏ. 1றூ. 2பே.) விசாலம் கொண்ட இக்காணியும் அதில் அமைந்துள்ள கட்டடங்கள், மரம், மட்டைகள், பழங்கள் உட்பட மற்றும் அனைத்தும் ஆகும்.

இக்காணி தங்காலை மாவட்டக் காணிப் பதிவகத்தில் E 259/67 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பிரதேச முகாமையாளர்,
ஹம்பாந்தோட்டை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இல. 07ஏ, டவர்ஹில் மாவத்தை,
ஹம்பாந்தோட்டை.

10-307

---

**மக்கள் வங்கி - கெபித்திகொல்லேவ கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2010.07.30 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"அனுராதபுரம் பிரசித்த நொத்தாரிசு ஆகிய திருமதி செனவிரத்ன முதியன்சேலாகே தீபது குமாரி அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2009.05.28 ஆந் திகதிய 4156உம், 4157 உம் இலக்கம் கொண்ட ஈட்டு முறியின் கீழ் முறையாக கெபித்திகொல்லேவ பதவிய பாதை, விமல் ஸ்டேர்ரஸ் மற்றும் அனுராதபுரம் வன்னியன் குலம் நாகசேன மாவத்த 1036, 259 ஆம் இலக்கத்தில் வசிக்கும் விக்கிரம ஆரச்சிலாகே சுனில் நிஸாந்த மற்றும் அனோமா பிரியதர்ஷனி வீரதுங்க ஆகியவர்கள் ஈட்டு முறியில் தவணை தவறியுள்ளதால், கூறப்பட்ட ஈட்டு முறியின் கீழ் முறையாக எட்டு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று முப்பத்தொரு ரூபாயும் (ரூ. 8,83,331.00), நான்கு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து பதின்மூன்று ரூபா ஐம்பத்தெட்டு சதமும் (ரூ. 4,63,013.58) ஆன தொகைப் பணம் மக்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டியுள்ளதால், முறையாக 2010.05.25 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் நூற்றுக்கு இருபத்து நான்கு (24%) வீதம் எட்டு இலட்சத்து எண்பத்துமூவாயிரத்து முந்நூற்று முப்பத்தொரு ரூபாயும் (ரூ. 8,83,331.00) ஆன தொகைப் பணம் 2010.05.25 ஆந் திகதி தொடக்கம் வருடாந்தம் நூற்றுக்கு (22%) வீதம் நான்கு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து பதின்மூன்று ரூபா ஐம்பத்தெட்டு சதமும் (ரூ. 4,63,013.58) ஆன தொகைப் பணத்திற்காக ஏலவிற்பனை தினம் வரை மேலும் வட்டி மற்றும் ஏலவிற்பனைக் கட்டணம் உட்பட ஏனைய கட்டணங்கள் இருப்பின் அத்துடன் பின்பு எவையேனும் கொடுப்பனவுகள் பெற்றிருப்பின் அதைக் கழித்து கூறப்பட்ட நான்கு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து பதின்மூன்று ரூபா ஐம்பத்தெட்டு சதமும் (ரூ. 4,63,013.58) ஆன தொகைப் பணத்தை அறவீடு செய்து கொள்வதற்காக கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஷொச்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களால் கூறப்பட்ட 4156 உம் 4157 ஆம் இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறியின் கீழ் கூறப்பட்ட வங்கிக்கு அடகு வைத்திருக்கும் ஆதனமும் நிலமும் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி பிரிவின் கீழ் மங்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

வடமத்திய மாகாணத்தில், அனுராதபுரம் நிருவாக மாவட்டத்தில் கிழக்கு நுவரகம் மாகாணத்தில் கனதரா கோரளையின் 246 ஆம் இலக்கங்கொண்ட கிராம சேவையாளர் பிரிவில் வன்னியன் குலம் என்றழைக்கப்படும் கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 21 ஆம் இலக்கங்கொண்ட குறிப்பு பத்திரத்தில் 1133 ஆம் இலக்கம் என்று காட்டப்பட்டுள்ள அரசாங்கக் காணித்துண்டிற்கு எல்லைகள் - வடக்கு : கி. இ. வ. 259 இல் லொட் இலக்கம் 1132; கிழக்கு : கி. இ. வ. 259 இல் நாகசேன மாவத்தையிலும்; தெற்கில் : கி. இ. வ. 259 இல் லொட் இலக்கம் 1134 உம் ; மேற்கில் : கி. இ. வ. 259 இல் லொட் இலக்கம் 1135 உம் ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள அளவில் ஹெக்டயர் பூச்சியம் தசம் ஒன்று ஏழு மூன்று (0.173ஹெக்டயர்) விசாலமுள்ள காணி மற்றும் அதற்குள்ளே அமைந்துள்ள மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளுடன் பாதை உரிமையும் உட்படும்.

மேற்கூறப்பட்ட காணியை உத்தரவுபெற்ற நிலஅளவையாளரான லியனகே சிரிபால அவர்களால் 2001.03.01 ஆந் திகதி மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்ட 997 ஆம் இலக்கங் கொண்ட மூல வரைவு படத்தில் காட்டப்பட்டுள்ள 03 உம் லொட் இலக்க காணித்துண்டிற்கு புதிய எல்லைகள் - வடக்கு : இம்மூல வரைவு படத்தின் லொட் இலக்கம் 02 ; கிழக்கு : கி. இ. வ. 259 இல் நாகசேன மாவத்தை ; தெற்கில் : கி. இ. வ. 259 இல் லொட் இலக்கம் 1134 உம் ; மேற்கில் : கி. இ. வ. 259 இல் லொட் இலக்கம் 1135 உம் ஆகிய மேலே கூறப்பட்ட எல்லைகளில் அமைந்துள்ள பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து பூச்சியம் எட்டு ஹெக்டயர் (0.0508 ஹெக்டயர்) விசாலமுள்ள காணி மற்றும் அங்கே அமைந்துள்ள மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளுடன் பாதை உரிமையும் உண்டு.

மேற்கூறப்பட்ட காணியை மீண்டும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளரான (P.B.) பி. பி. இலங்கசிங்ஹ அவர்களால் 2008.12.14 ஆந் திகதி மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்ட 2008/ஏ.என்/293 ஆம் இலக்கங் கொண்ட மூல வரைவுபடத்தில் காட்டப்பட்டுள்ள 04 உம் லொட் இலக்கங் கொண்ட பகுதிக்கு புதிய எல்லைகள் - வடக்கு : 997 ஆம் இலக்கங் கொண்ட மூலவரைவு படத்தின் லொட் இலக்கம் 02 ; கிழக்கு : எப். வி. பி. 259 இல் லொட் இலக்கம் 1163 உம் ; தெற்கில் : எப். வி. பி. 259 இல் லொட் இலக்கம் 1134 உம் ; மேற்கில் : எப். வி. பி. 259 இல் லொட் இலக்கம் 1135 உம் ஆகிய எல்லைகளில் அமைந்துள்ள அளவில் பூச்சியம் தசம் பூச்சியம் ஐந்து பூச்சியம் எட்டு ஹெக்டயர் (0.0508 ஹெக்டயர்) விசாலமுள்ள காணி மற்றும் அங்கே

அமைந்துள்ள மரங்கள், இலைகள், பழங்கள் ஆகிய சகலவைகளுடன் பாதை உரிமையும் உண்டு.

இக்காணி அநுராதபுரம் மாவட்ட காணி ஆணையாளர் அலுவலகத்தில் எல். டி. ஓ. 229/64, 608/172 மற்றும் 608/180 ஆம் இலக்க பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

வலய பொது முகாமையாளர்,
(வட மத்திய வலயம்).

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
அநுராதபுரம்.

10-312

---

**மக்கள் வங்கி**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

1986 ஆம் ஆண்டின் 32ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2010.08.27 ஆந் திகதி மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் பின்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''திரு. ரட்னசபாபதி நவரட்ணராஜா வரதன், பிரசித்த நொத்தாரிசு, திருக்கோணமலை அவர்களால் மக்கள் வங்கியின் சார்பாக 2006.03.02 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 689 ஆம் இலக்க முறியின் பிரகாரம் கிண்ணியா 5, இலக்கம் 65 மத்திய கல்லூரி கிழக்கு ஒழுங்கையைச் சேர்ந்த ஜனாப். முகம்மது அப்துல்லா மொகமது மர்சூக் என்பவர் குறித்த முறியில் குறிப்பிட்டுள்ள கொடுப்பனவை செலுத்தத் தவறியுள்ளதன் காரணமாக மக்கள் வங்கிக்கு அவரிடமிருந்து ஏழு இலட்சத்து எழுபத்தையாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஆறு ரூபா நாற்பத்தொரு சதம் (ரூ. 7,75,396.41) குறித்த பணத்தை 2009.02.25 ஆந் திகதி முதல் இற்றைவரை 22% வட்டியுடனும் செலவு தொகையுடனும் சேர்த்துப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த 689 ஆம் இலக்க முறியின் பிரகாரம் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள குறித்த ஆதனத்தையும், அத்தோடு சேர்ந்தவற்றையும் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரகாரம் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம், கண்டியைச் சேர்ந்த அனுமதி பெற்ற ஏல விற்பனைகாரராகிய சொக்மன் மற்றும் சமரவிக்கிரம அவர்களின் மூலம் ஏல விற்பனைவு செய்வதற்கு குறித்த மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபை இத்தால் தீர்மானிப்பதுடன் குறித்த மக்கள் வங்கியினது ''29எல்'' என்னும் பிரிவின் கீழ் இதுவரை பெற்றுக் கொண்ட கொடுப்பனவு (ஏதும் இருப்பின்) அதை கழித்துக் கொண்டு பெற்றுக் கொள்வதென்றும், மேலும் தீர்மானித்துள்ளது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

கிழக்கு மாகாணத்தில், திருகேணமலை மாவட்டத்தில் 1 கோறளையில் கிண்ணியா, தம்பலகாமம்பற்று, 5 ஆம் வட்டாரம் குட்டிக்கரச்சியில் அமைந்துள்ளதும், அனுமதிபெற்ற நிலஅளவையாளர் கே. செல்லப்பிள்ளை அவர்களால் 2005.09.08 அன்று தயாரிக்கப்பட்ட 5064 நிலஅளவைப்படத்தில் 01 ஆம் துண்டு எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவிடப்பட்ட வரையறையுள்ள ஒரு காணித்துண்டு, மற்றும் எல்லைகள் - வடக்கு : ஒழுங்கை ; கிழக்கு : திருமதி மிகருவான் என்பவரால் உரிமை கோரப்படும் ஆதனம்; தெற்கு : ஜனாப் ஜெய்லாப்தீன் என்பவரால் உரிமை கோரப்படும் ஆதனம்; மேற்கு : ஒழுங்கை. இதன் விஸ்தீரணம் பதின்மூன்று தசம் ஒன்று நான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 13.14பே.) குறித்த ஆதனத்தில் அமைந்துள்ள, மண், மரங்கள், பயிர்கள், கட்டிடங்கள், மற்றும் அதில் அமைந்துள்ள ஏனையவை சகலதும். குறித்த ஆதனம் திருகோணமலை காணிப் பதிவகத்தில் 2006.03.02 ஆந் திகதி அன்று 689 ஆம் இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

குறித்த நிலஅளவைப்படத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு வீதிக்கென ஒதுக்கப்பட்டுள்ளதன் ஊடான பாதை உரித்துடன் கூடியது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
திருகோணமலை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
128, கண்டி வீதி,
திருகோணமலை.

10-311

---

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 362113 - சுஜீவ புஸ்ப குமார சமரசிங்க

23.10.2009 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த சுஜீவ புஸ்ப குமார சமரசிங்க என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக திஸ்ஸமாராம பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. ஜி. ஆனந்தவின் 25.04.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1014 மற்றும் 17.09.2007 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1130 மூலம் செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 14.09.2009 ஆந் திகதி வரை ரூபா 15,13,667.85 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறிகள் இலக்கங்கள் 1014 மற்றும் 1130 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள

இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 15,13,667.85 வுடன் 14.09.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 14,16,745.67 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 20% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், திஸ்ஸமாராம மகம்பத்து பகுதி திஸ்ஸமாராம கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் எச். பி. பி. ஜயவர்தனவின் 17.10.1999 ஆந் திகதி வரையப்பட்ட வரைபடம் இலக்கம்6868 இல் காண்பிக்கப்பட்ட கச்சேரியகம காணியின் லொட் 15 என்ற காணியின் எல்லைகள் - வடக்கு : வரைபடம் இலக்கம் 6868 லொட் 4 ; கிழக்கு : ரோட் ; தெற்கு: வரைபடம் இலக்கம் 6868 லொட் 6 உம் ; மேற்கு : இக்காணியின் லொட் 4 மற்றும் இக்காணியின் நிலம், கட்டிடம், மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து. இக்காணி ஹம்பாந்தோட்டை காணிப் பதிவகத்தில் C 71/13 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்கூறிய காணி தற்சமயம் வரையப்பட்ட வரைபடம் மூலம் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:-

மேற்படி திஸ்ஸமாராம கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் சி. என். ஜயவர்தனவின் 17.10.1999 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 6868 இல் காண்பிக்கப்பட்ட கச்சேரியகம காணியின் லொட் 5 என்ற காணியின் அளக்கப்பட்ட நிலஅளவையாளர் டபிள்யூ. ஜி. டி. யு. கருணாரத்னவின் 22.02.2007 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 3819 இல் காண்பிக்கப்பட்ட லொட் A காணியின் எல்லைகள் ; வடக்கு : வரைபடம் இலக்கம் 6868 இல் லொட் 4 ; கிழக்கு : ரோட் ; தெற்கு : வரைபடம் இலக்கம் 6868 லொட் 6 உம் ; மேற்கு : இக்காணியின் லொட் 4 விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 12.25பே.) ஹெக்டயர் 0.03098 மற்றும் இக்காணியில் அமைந்துள்ள எல்லாம் சேர்த்து.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-368

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

கடன் கணக்கு இலக்கம் : 262369 - கல்யாணி பெரேரா விஜேசிங்க குணதிலக்க மற்றும் சிரிநாத் ரவிரத்ண முணசிங்க

24.02.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த கல்யாணி பெரேரா விஜேசிங்க குணதிலக்க மற்றும் சிரிநாத் ரவிரத்ண முணசிங்க என்பவர்கள் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஜி. ஏ. சி. பி. கனேபொலவின் 07.10.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 10030 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும் அத்துடன் மேற்படி முறி பிரகாரம் 24.09.2009 ஆந் திகதி வரை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ரூபா 12,23,390.21 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறி இலக்கம் 10030 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 12,23,390.21 பணத்தொகையுடன் 25.09.2009 ஆந் திகதி முதல் ஏலத் திகதி வரை ரூபா 10,17,019.78 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 14% சத வட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு பதிவு எல்லையில் அதிகாரி பத்து சியன கோரளையில் களனி பிரதேச சபை எல்லையில் சிங்காலமுல்ல களனசிரி மாவத்தை, கட்டிடம் இலக்கம் 36/5 இல் அமைந்துள்ள நிலஅளவையாளர் எஸ். டபிள்யூ. மாகலண்தவின் 23.03.1970 ஆந் திகதியுடைய வரைபடம்இலக்கம் 323. இல் காண்பிக்கப்பட்ட மக்குலுகாவத்த காணியின் லொட் 4 எல்லைகள் - வடக்கு : இக்காணியின் லொட் 3 ; கிழக்கு : லொட் 39 (ரோட் 20 அடி); தெற்கு : லொட் 5 ; மேற்கு: களனி நகர சபைக்கு சொந்தமான காணி இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 18பே.) இக்காணியில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாம் சேர்த்து இக்காணி கொழும்பு காணி பதிவகத்தில் C 387/129 இல் பதிவு செய்யப்பட்டது.

மேற்படி வரைபடம் இலக்கம் 323 இல் காண்பிக்கப்பட்ட பாதைக்கு என்று ஒதுக்கப்பட்ட லொட் 37, 38 மற்றும் 39 பாவிக்கும் உரிமையுடன்.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-372

---

## இலங்கை வங்கி

1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

2008.10.16 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. "பிரசித்த நொத்தாரிசு எம். எம். இக்பால் அத்தாட்சிப்படுத்திய 2001.08.07 ஆந் திகதியிட்ட ஈட்டு முறி இல. 18665 இன் பேரில் இல. 39, லங்கா மாதா ரோட், கட்டான கிழக்கு, கட்டான என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. வராபிட்டிய ஆச்சாரிகே நிஹால் காமினி

என்பவரிடமிருந்து முதலும் 2008.09.05 வரை வட்டியும் ஐந்து இலட்சத்து இருபத்தெட்டாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஏழு ரூபா நாற்பத்தெட்டு சதங்களும் (ரூ. 5,28,397.48) அத்துடன் இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து தொளாயிரத்து இருபத்திரண்டு ரூபா இருபத்தைந்து சதத்தில் (ரூ. 2,90,922.95) ஆண்டுக்கு 16.88% வீதத்தில் 2008.09.06 ஆந் திகதி தொடக்கம் கொடுப்பனவுத் திகதி வரை வட்டியும் வங்கிக்கு வருமதியாக உள்ளதாலும்,

2. மேலே '1' இல் குறிப்பிட்ட தொகையையும் அத்துடன் விற்பனைத் திகதிவரை மேற்குறிப்பிட்டவாறு மேலும் வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு மேற்குறிப்பிட்ட ஈட்டு முறி இல. 18665 இல் காப்பளித்து ஈடுவைக்கப்பட்ட சொத்தை விற்பதற்கு இல. 4D, ரதகுரு மாவத்த, சிலாபம் என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. டி. எல். ஜே. நிஸ்ஸங்க இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், நீர்கொழும்பு பதிவுப் பிரிவில் அலுத்குரு கோரளை துனகஹபற்றுவில் கஜுவரிப்புவ கிழக்கில் அமைந்த வவுல்ஹொரேவத்த அல்லது தவட்டகஹவத்த என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. பிரசாத் விமலசேன தயாரித்த 1996.04.07 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 2066 இல் துண்டு இல. 02 என விபரித்த வடக்கில் : ரோட்டும் (RDA) ; கிழக்கில் : டபிள்யூ. ஏ. தோமஸ் அப்புஹாமியின் காணியும்; தெற்கில் : எஸ். ஜொகினு சில்வாவின் நெல் வயலும்; மேற்கில் : துண்டு இல. 01 உம் எல்லைகளாகக் கொண்டு ஒரு றூட் ஆறு தசம் இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 6.2பே.) விஸ்தீரணமுடைய காணியும் இவ் எல்லைகளுக்குள் அடங்கும் சகலதும் ஆகும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் E 758/124 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திரு. பீ. டீ. கோமிஸ்
முகாமையாளர்.

இலங்கை வங்கி
புத்தளம் கிளை.

10-402

---

## இலங்கை வங்கி

### 1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 21 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

2010.08.19 இல் நடைபெற்ற கூட்டமொன்றில் இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபை விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானித்ததாவது:-

1. "பிரசித்த நொத்தாரிசு திரு. எஸ். எம். கமகே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.07.11 ஆந் திகதிய இலக்கம் 1976 கொண்ட ஈட்டு முறியின் பேரில் இலக்கம் 21/2, (B), புரூம்பீல்ட் மாவத்தை, மேல் லேக் வீதி, நுவரெலியா என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. விஜேதுங்க முதியன்சேலாகே மஞ்சுல விஜேதுங்க என்பவரினால் முதலும் 21.06.2010 வரையிலான வட்டியுமாக ஆறு இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூற்று மூன்று ரூபா நாற்பத்தொன்பது சதமும் (ரூ. 6,78,703.49) அத்துடன் நான்கு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து நாநூற்று அறுபத்தாறு ரூபா முப்பத்தைந்து சதத்திற்கு (ரூ. 4,49,466.35) 22.06.2010 ஆந் திகதி தொடக்கம் முழுப்பணமும் முற்றாகச் செலுத்தி முடிக்கும் வரை ஆண்டுக்கு பதின்நான்கு (14%) வீதத்திலான வட்டியும் இலங்கை வங்கிக்குச் செலுத்த வேண்டியுமுள்ளது.

2. மேற்குறிப்பிட்ட 2007.07.11 ஆந் திகதிய இலக்கம் 1976 கொண்ட முறியின் மேல் வருமதியாகவுள்ள ஆறு இலட்சத்து எழுபத்தெட்டா யிரத்து எழுநூற்று மூன்று ரூபா நாற்பத்தொன்பது சதமும் (ரூ. 6,78,703.49) 22.06.2010 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை மேற்குறிப்பிட்டவாறு வட்டியும் இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய செலவுகள் மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இலங்கை வங்கிக்கு ஈடுவைத்துள்ள, இதன் கீழ் விபரிக்கப்பட்டிருக்கும் சொத்தை பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு இலக்கம் 24, ரொறிங்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் மற்றும் சமரவிக்ரம அவர்களுக்கு இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 19 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களுக்கமையவும் இத்தால் அனுமதியும் அதிகாரமும் வழங்கப்படுகின்றது."

### அட்டவணை

மத்திய மாகாணம், நுவரெலியா மாவட்டம், நுவரெலியா பிரிவு, ஓயபலாத்த கோறளை, நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள், நுவரெலியா (B) புரூம்பீல்ட் மாவத்தையில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் திரு. ஆர். கனகரத்னம் அவர்களால் தயாரிக்கப்பட்ட 1993.12.12 ஆந் திகதிய 6046 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள வரிமதிப்பிலக்கம் 21/2 கொண்ட "மல்ஓய" என்றழைக்கப்படும் கட்டடத்துடன் கூடிய, மேற்கூறிய 6046 ஆம் இலக்க வரைபடத்தின் அளப்பனவு விவரணத்திற்கிணங்க, வடக்கிலும், வடகிழக்கிலும்: துண்டு "Z" உம் ; கிழக்கில் : 10/75 ஆம் இலக்க வரைபடத்தில் 2 ஆந் துண்டின் பாகமொன்றாகிய, துண்டு "Y" உம்; தென்கிழக்கில் : 10/75 ஆம் இலக்க வரைபடத்தில் 2 ஆந் துண்டின் பாகமொன்றாகிய, துண்டு 1A ; தென் மேற்கில் : பிறயறி கெஸ்ட் ஹவுஸ் அமைந்துள்ள இடத்தின் பாகமொன்றாகிய, துண்டு "x உம், ; வடமேற்கில் : வரிமதிப்பிலக்கம் 21 கொண்ட டில்குஷ் நிலமனையும் எல்லைகளாகக் கொண்ட, பத்து தசம் எட்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 10.8பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும். அதற்குள் அமைந்துள்ள மனை, கட்டடங்கள், மரங்கள் மற்றும் அனைத்தும், 10/75 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 3, 4/1950 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 2, 3, 4 ஆந் துண்டுகள், A/78 ஆம் இலக்க வரைபடத்தின் துண்டு 5, 3803 ஆம் இலக்க வரைபடத்தின் "K" எனக் காட்டப்பட்டுள்ள துண்டு ஆகியவற்றின் மேலான பாதை உரித்துமாகும். இது நுவரெலியா மாவட்ட காணிப் பதிவகத்தில் A 64/232, A 68/253, A 47/220, A56/245 ஆகிய பக்கங்களில் பதியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

திரு. கே. ஏ. தர்மரத்ன,
சிரேஷ்ட முகாமையாளர்.

இலங்கை வங்கி
நுவரெலியா கிளை.

10-405

**கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு ஏற்பாடுகள் சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ. எல். சீ. (பதிவு இலக்கம் PQ 116) பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 236443 - களுதேவ சுஜாதா பிரியாணி மென்டிஸ், அகம்பொடி வேர்ணன் பிரேமசந்திர மென்டிஸ் குணசேகர

18.06.2010 ஆந் திகதியன்று கூடிய கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையினால் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த களுதேவ சுஜாதா பிரியாணி மென்டிஸ் மற்றும் அகம்பொடி வேர்ணன் பிரேமசந்திர மென்டிஸ் காணியை ஈடுவைத்த அகம்பொடி வேர்ணன் பிரேமசந்திர மென்டிஸ் குணசேகர கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ சார்பாக காலி பிரசித்த நொத்தாரிசு கே. சி. விஜயநாரயணவின் 29.04.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1033 மற்றும் 17.05.2005 ஆந் திகதியுடைய முறி இலக்கம் 1057 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ளதாலும்' அத்துடன் மேற்படி முறிகளின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 30.04.2010 திகதி வரை ரூபா 29,29,118.49 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறிகள் இலக்கங்கள் 1033 மற்றும் 1057 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத்தொகையான ரூபா 29,29,118.49 வுடன் 01.05.2010 ஆந் திகத முதல் ஏலத்திகதி வரை ரூபா 24,04,134.56 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 14% சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள் வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில், இலக்கம் 99, உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டது."

**அட்டவணை**

1. தென் மாகாணம், காலி மாவட்டம், வெலபொட பத்து தெற்கு பட்டபொல கிராமத்தில் அமைந்துள்ள கெட்டபொல முகலான மற்றும் மண்ணண (T. P. 259860) காணியின் லொட் 1 காணியின் பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் 22 எல்லைகள் - வடக்கு : இக்காணியின் லொட் 22 ; கிழக்கு : இக்காணியின் லொட் 13 (20 அடி ரோட்) ; தெற்கு : லொட் 27 மற்றும் லொட் 26 ; மேற்கு : இக்காணியின் லொட் 23 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 28பே.) நிலஅளவையாளர் பி. டபிள்யூ. எஸ். சி. விதானா 23.10.2001 ஆந் திகதி வரையப்பட்ட வரைபடம் இலக்கம் 1057 படி இக்காணி காலி மாவட்ட காணிப் பதிவகத்தில் C 753/204 இல் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி பட்டபொல கிராமத்தில் அமைந்துள்ள லொட் 1 கெட்டபொல முகலான மற்றும் மண்ணண (T. P. 259860) காணியின் பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் 12 எல்லைகள் - வடக்கு : இக்காணியில் லொட் 10 ; கிழக்கு : இக்காணியின் லொட் 13 (20 அடி ரோட்) ; தெற்கு : லொட் 22 ; மேற்கு : லொட் 11 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 10பே.) அல்லது 0.0253 ஹெக்டயார் மேற்படி சொல்லப்பட்ட வரைபடம் இலக்கம் 1057 படி இக்காணி காலி மாவட்ட காணி பதிவகத்தில் C 753/205 பதிவு செய்யப்பட்டது.

மேற்படி சொல்லப்பட்ட வரைபடம் இலக்கம் 1057 இல் காண்பிக்கப்பட்ட பாதைக்கான லொட் 13 பாவிக்கும் உரிமையுடன்.

(திருமதி) ஆர். ஆர். துனுவில,
கம்பனிச் செயலாளர்.

10-371

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.